# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1987/37 - 2016 ඔක්තෝබර් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.10.06

*1987/37 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழில்**

(7) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சர் ஆகிய நான், (136 ஆம் அத்தியாயம்) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலுடன் தொடர்பான கட்டளை ஒன்றை ஆக்குவதற்கு உத்தேசித்துள்ளேன் என்பதை அக்கட்டளைச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் ஏதாவது இருப்பின், 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி பி. ப. 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்துமூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

டபிள்யூ. டி. ஜே. செனெவிரத்ன,
தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2016, ஒற்றோபர் 4.

**கட்டளை**

1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்கு ஏற்புடையதாகும். துறைமுகப் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் மற்றும் கப்பல் செப்பனிடும் துறை, துறைமுகம் மற்றும் துறைமுகப் போக்குவரத்தில் உள்ளேயும் வெளியேயும் நடைமுறைச் சேவைகளில் ஈடுபட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளர் வகையினர் ; மற்றும் இந்த நிகழ்வுகளுடன் தொடர்புடைய வேலையாட்கள் அதனுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டுள்ள பிற வேலையாட்கள் கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலின் கீழ் உள்ளடக்கப்படுவார்கள்.

தேர்ச்சியற்றோர் :

1. வேலை உதவியாளர்
2. கப்பல் வேலையாள் (கப்பலோட்டம்)
3. கப்பல் சேராங்
4. குழாய் சேராங்
5. கிறீஸ் பூசுபவர்

6. பொருட்கள் அடுக்குபவர்
7. மணி அடிப்பவர்/சமிக்ஞையாளர்/கயிறுகட்டுபவர்
8. உதவியாளராகப் பொறுப்பேற்கும்/ஒப்படைக்கும் அலுவலர்
9. பொருட்கள் எடுத்துச் செல்பவர்

ஓரளவு தேர்ச்சியுடையோர் :

10. கப்பல்தள பணியாள்
11. சாரதி (நீரில்)
12. கப்பலோட்டப் பணியாள்
13. கென்ட்றி பாரமுயர்த்தி சமிக்ஞையாளர்
14. அங்கியில்லா சுழியோடி
15. கப்பல் கருவிகளைக் கையாள்பவர்
16. திட்டமிடல் உதவியாளர் (முனையம்/கப்பலில்)
17. துறை மேடைப் பணியாளர்
18. பொறுப்பேற்கும்/பொறுப்பளிக்கும் அலுவலர்
19. இயக்க உதவியாளர்

தேர்ச்சியுடையவர்கள் :

20. விஞ்சியாளர்
21. ஹெச் தண்டல்
22. கப்பல் சரக்குக் கையாளல் உபகரணம் இயக்குபவர்
23. உதவிப் பிரிவுக் கண்காணிப்பாளர்
24. கொள்கலன் கையாளல் உபகரணம் இயக்குபவர் (QGC / RTG/ Fork Lift/ Prime Movers/ Yard Tracters/ Crane/ Oil Pums)
25. பொறியியல் அலுவலர்
26. இயந்திர அறை நுட்பவியலாளர்
27. கடற் சுழியோடி
28. பல் தேர்ச்சி படகு இயக்குபவர்
29. நங்கூரத்தள ஓவசியர்
30. வெளிச்ச வீட்டுப் பொறுப்பாளர்
31. உதவி இயக்குநர்
32. உள்ளக முனையங்களுக்கிடையிலான இணைப்பாளர்
33. டெக்/வாப்பு கட்டுப்பாட்டாளர்கள்
34. முனைய கட்டுப்பாட்டாளர்கள்
35. முனைய திட்டமிடுபவர்
36. இயக்கக் கட்டுப்பாட்டாளர்
37. கொச்சன்
38. சாரதி
39. உதவி டக்கள அதிபர் (டக் மற்றும் லான்சி)
40. போசன்
41. முகாமைத்துவ உதவியாளர் (கையாளல்)
42. சறுக்குவழி கட்டுப்பாட்டாளர்
43. கப்பற்கையாளல் கட்டுப்பாட்டாளர் (திட்டமிடல் எழுது வினைஞர்)
44. கடற்கலப் போக்குவரத்து இணைப்பாளர்
45. பல்தேர்ச்சி தொழில் நுட்பவியலாளர்

**குறிப்பு :**

அலுவலக வேலையாட்கள், பொறியியல் தொழிலில் உள்ள வேலையாட்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் ஏதாவது வேறு கட்டளை அல்லது ஏற்பாடுகளினால் மேவப்படுபவர்கள் கடல்தொழில் போக்குவரத்து மற்றும் அதனைச் செயற்படுத்தும் சேவைகள் தொழிலுக்குரிய சம்பளச் சபையால் மேவப்படமாட்டார்கள், இருந்த போதிலும் வகைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது வேறு எந்த வகையிலேனும் மேலே குறிப்பிட்டுள்ள வேலையாளர் வகைகளில் தொடர்பான வேலைகளைச் செய்யும் ஒவ்வொரு வேலையாளும் சொல்லப்பட்ட சம்பளச் சபையால் மேவப்படுவர்.

10– 897

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.